# பிக்குகளின் யோசனை புலிகள் பரிசீலனையில்

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 12 இதழ் 73
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 24 — 04 — 1992

## முடிவு நாளை

[யாழ்ப்பாணம்] பௌத்த பிக்குகள் குழுவினர் நேற்று சமர்ப்பித்த ஆலோசனை பிரச்சனை தீர்வு சம்பந்தமான யோசனைகள் புலிகளால் பரிசீலனை செய்யப்பட்டபின் நாளை சனிக்கிழமை பதில் [4-ம் பக்கம் பார்க்க]

## இனப்பிரச்சனைக்கான காரணம் தேரர் விளக்கம்

[யாழ்ப்பாணம்] அன்னிய ஏகாதிபத்திய ஆதிக்கமும் அதனைத்தொடர்ந்து இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் தமிழருக்கு [4ம் பக்கம் பார்க்க]

## கோட்டை பகுதியை பௌத்தகுழு பார்வையிட்டது

[யாழ்ப்பாணம்] பௌத்த பிக்குகள் குழு நேற்று யாழ் நகர்ப் பகுதியிலும், வடமராட்சிப் பகுதியிலும் யுத்தத்தால் பாதிக் (4ம் பக்கம் பார்க்க)

## கொம்படியில் சக்திவாய்ந்த குண்டு வெடிப்பு

# சிறுவர், வயோதிபர், பெண்கள் உட்பட 20பேர் உடல்சிதறிப்பலி

### 60 பேர் படுகாயம்; 10 கடைகள் சேதம்

(கிளிநொச்சி)

**கொம்படிப் படகுச்சேவைப் பகுதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற குண்டு வெடிப்பினால் சிறுவர்கள், பெண்கள், வயோதிபர் உட்பட 20க்கும் மேற்பட்டோர் உடல் சிதறிப் பலியாகினர். 60 பேர் வரை மிக மோசமாக காயமடைந்தனர். கடைகள் பலவும் தரைமட்டமாகின.**

இதுபற்றி தெரியவருவதாவது; நேற்று நண்பகல் 12-30 மணியளவில் கொம்படிபாதையில் [கிளிநொச்சி பக்கமாக] பெருந்திரளான மக்கள் கூடியிருந்த வேளையில் பயங்கரச் சத்தத்துடன் குண்டொன்று வெடித்தது.

இக்குண்டு வெடிப்பினால் இருபத்திற்கும் மேற்பட்டோர் உடல் சிதறிப்பலியானதுடன் பலர்படுகாயமடைந்தனர்.

தற்காலிகமாக அமைக்கப்பட்ட கடை ஒன்றினுள் மண்ணெண்ணை பரலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சக்தி வாய்ந்த மர்மக்குண்டொன்று இவ்வாறுக வெடித்ததாகத் தெரியவருகிறது.

இக்குண்டு வெடிப்பினால் பலர்பாரியஎரிகாயங்களுக்குள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு நேற்று மாலை 4-30 மணியளவில் லொறிகளிலும், ராக்டர்களிலும் கொண்டுவரப்பட்டனர்.

இறந்தவர்களில் பலரின் சடலங்கள் ஆங்காங்கே உருக்குலைந்த நிலையில் சிதறிக்கிடப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 சிறுவர்கள் தலைசிதறிப் பலி

[கிளிநொச்சி] கொம்படிப்பாதையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஒரேகுடும்பத்தை சேர்ந்த மூன்று சகோதரச் சிறுவர்கள் தலைசிதறிப் பலியாகினர்.

இக்குண்டுவெடிப்பில்பெரிய பண்டிவிரிச்சானைச் சேர்ந்த சின்னத்தம்பியின் பிள்ளைகளான சி. நவநீதன் (வயது-12) சி. சுகந்தன் (வயது-10), சி. சுபாகினி [வயது-7] ஆகிய மூவரும் அதே இடத்தில் உடல் சிதறி இறந்து கிடக்க காணப்பட்டதாக படுகாயமடைந்த இப்பிள்ளைகளின் சிறிய தகப்பனாரான க. ஆனந்தவடிவேலு தெரிவித்தார்.

இப்பிள்ளைகளின் சடலங்கள் உருக்குலைந்த நிலையில் மிகப் பரிதாபகரமாகக்காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

[வி-56]

## கொழும்பு பயணம் தடைப்பட்டது

[யாழ்ப்பாணம்] கொம்படிப்பகுதியில் நேற்று நண்பகல் நிகழ்ந்த குண்டுவெடிப்பினால் கொழும்பு பயணிகளின் பயணம் தடைப்பட்டது.

நேற்று பிற்பகல் முத்திரைச்சந்தையிலிருந்து புறப்பட்ட பயணிகள் பெரும் (4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரியை பௌத்தகுழு பார்வையிடும்

[யாழ்ப்பாணம்] யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ள தென்னிலங்கை பௌத்தபிக்கு தூதுக்குழு இன்று அரச உயரதிகாரிகளை சந்திக்க உள்ளதாகத் தெரியவருகிறது. மற்றும்பல அமைப்புகளையும் இவர்கள் சந்திக்க உள்ளனர்.

மேலும் யாழ்ப்பாணப்பகுதிகளையும் சுற்றிப்பார்வையிடு (4ம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றில் நேற்று கூச்சல் குழப்பம்

[கொழும்பு] நாடாளுமன்றில் நேற்று பல தடவைகள் கூச்சல் குழப்பங்கள் ஏற்பட்டதால் இடையிடையே சபை ஒத்திவைக்கப்பட்டது.

அவசரகால சட்ட நீடிப்பு விவாதத்தின்போது உடுகம பொல விவகாரம், சுதந்திரக் (4-ம் பக்கம் பார்க்க)

## சிங்கள கைதிகளை இன்று சந்திப்பர்

(யாழ்ப்பாணம்) பௌத்த பிக்குகள் தூதுக்குழு புலிகளின் பாதுகாப்பில் உள்ள சிங்கள யுத்தக்கைதிகளை இன்று சந்திக்கவுள்ளது.

இரண்டாண்டுகள் வரையில் விடுதலைப் புலிகளின் காவலில் வைக்கப்பட்டிருக்கும் சிங்கள யுத்தக்கைதிகளை பௌத்த பிக்குகள்குழு சந்தித்து பேச புலிகள் ஏற்பாடுகள் செய்துள் [4-ம் பக்கம் பார்க்க]

## தமிழருக்குஎதிராகஅநீதியை சிங்கள தேசம் கட்டவிழ்த்துள்ளது

- அன்ரன் பாலசிங்கம்

(யாழ்ப்பாணம்) மனித அன்பையும், அறத்தையும், மனித தர்மத்தையும், ஜீவகாருண்யத்தையும் போதிக்கும் பௌத்த மதத்தை தழுவிக்கொண்ட சிங்கள தேசம் 'தமிழ் மக்களுக்கு எதிராக அநீதியையும் அதர்மத்தையும் மனிதாபிமானமற்ற கொடுமையினையும் கட்டவிழ்த்துவிடுவது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும் என்று கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பௌத்த பிக்குகளிடம் சுட்டிக்காட்டினார்.

புலிகளுக்கும், பிக்குகளுக்குகளுக்குமிடையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போது பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது:

சிங்கள அரச பயங்கரவாதத்தின் எதிர்விளைவாகவே தமிழ்மக்கள் மத்தியில் ஆயுதப் [4-ம் பக்கம் பார்க்க]

## ஒரு மாத காலத்தில் 36 படையினர் பலி

[கொழும்பு] கடந்த ஒரு மாத காலப்பகுதியில் 36 இராணுவத்தினரும், 2 பொலிசாரும், ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவரும் கொல்லப்பட்டதாக அரசு ஊர்ஜிதப்படுத்தியுள்ளது.

நாடாளுமன்றத்தில் நடந்த அவசரகாலச் சட்ட விவாதத்தின் போது இத்தகவல் வெளியிடப்பட்டது.

வடக்கு-கிழக்கில் புலிகளின் தாக்குதலில் 70 க்கும் மேற்பட்ட படையினர் காயமடைந்ததாகவும் அரசு தெரிவித்துள்ளது.

[கே]

## மன்னார் மோதலில் 2 இராணுவம் பலி

(கொழும்பு) மன்னார் மாவட்டத்தில் நேற்று விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னாரில் நேற்றுக் காலை [4ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்


### தேவை

சைக்கிள் திருத்துவதில் அனுபவம் உள்ள ஒருவர் தேவை. விபரங்களுக்கு நேரில். S M. அந்தோனிப்பிள்ளை, சில்லாலை. (சி-6188)

### ''மீரா பிரசுரங்கள்''

உயிரோட்டமான நாவல்கள் அக்கினி, முள்முடி மன்னர்கள், விடியலைத் தேடி, ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள். யாழ்ப்பாணம், சுன்னுகம், சாவகச்சேரி, நெல்லியடி, வல்வெட்டித்துறை புத்தக சாலைகளில் விற்பனையாகின்றது. (சி-6200)

### விற்பனைக்கு

வொண்டர்லயிட் பவுடர் 550g—275g மற்றும் நுளம்புத்திரி மொத்த விற்பனைக்கு உண்டு. புஸ்பா & Co, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (ஏ-2091)

A/L கடந்தகல வினுவிடை (உயர் கல்வி பதிப்பக வெளியீடு) 1–5 வரை தமிழ், கணிதம், தம்பிராசா 7-ம சமூகக் கல்வி - சந்திரசேகரம் 7-ம், 8-ம் சுகாதாரக் கல்வி செல்வநாயகம் பிரான்சிஸ் காரைக்கால் அம்மையார் புராணம். சானல்வரி (உ. வே. சாமிநாத ஐயர் உரை, ரமணிச்சந்திரன், லக்ஷ்மி நாவல்கள், பாலாஜி புத்தகசாலை, 27, மின்சார நிலைய வீதி, 15/5 முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [ஏ-2092]

### மணமகன் தேவை

பாலர் பாடசாலை ஆசிரியையாக உத்தியோகம் பார்க்கும் 27 வயதுடைய பெண்ணிற்கு பெண்டிக்கோஸ், அங்கிலிங்கன் அல்லது மெதடிஸ்த மணமகன் தேவை. செ. விசயரத்தினம் லக்சுமி திருமண சேவை, நவாலி கிழக்கு, மானிப்பாய். (சி-6195)

33 வயது, பரணி நட்சத்திரமுள்ள பெண்ணிற்கு நல்ல உத்தியோகம் பார்ப்பவர் அல்லது சொந்தக் கடை நடத்துபவர் மணமகனைத் தேவை. செ. விசயரத்தினம், லக்சுமி திருமண சேவை, நவாலி கிழக்கு, மானிப்பாய். (சி-6196)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள். வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்கள். பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணைவைத்தியர் சி. இராசரத்தினம். 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [சி-6126]

### வைத்திய சேவை

பெண்கள், கர்பிணிகள், குழந்தைகள் ஆகியோருக்கும் முறிவு, நெரிவு, சதைநெரிவு, கண்டல் முதலிய சகலவித ரோகங்கட்கும் நிவாரணம் பெற நாடுங்கள். அமுதா வைத்திய நிலையம், டாக்டர் திருபதி அ. ஸ்ரீபதி D. A. M. [Cey] [சமாதான நீதவான்], 15, இராசாவின் தோட்டம் ஒழுங்கை, [குயின்பத்மாவீதி], யாழ்ப்பாணம், [சி-6189]

### பரீட்சை (ஆண்டு 4)

ஆண்டு 4 பரீட்சை (தமிழ், கணிதம், ஆங்கிலம்) 26-04-92 ஞாயிறு மு. ப. 8-00, மு ப. 11-00 மணிநேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும்: புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [சி-6201]



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## பட்டப்பின் படிப்பிற்காகப் பதிவு செய்தல் 1992

(முதுகலைமானி/கலாநிதி)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 1991/92 கல்வியாண்டின் பின்வரும் பாடநெறிகட்கு பட்டப்பின் படிப்பிற்காக தகுதிபெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 01-06-1992 வரைகோரப்படுகின்றன.

பொருளியல், கல்வியியல், புவியியல், இந்து நாகரிகம், அரசியல், சமஸ்கிருதம், வரலாறு, தமிழ், மெய்யியல், மொழியியல், கிறிஸ்தவ நாகரிகம், சித்த மருத்துவம், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், வர்த்தகம்.

விண்ணப்பபடிவங்கள் நேரடியாக அன்றி தபால் மூலமாகவோ 27-04-1992 இலிருந்து பெற்றுக்கொள்ளலாம்,

நேரடியாக விண்ணப்பப் படிவங்களைப் பெறவிரும்புவோர் பல்கலைக்கழக நிதியாளரிடம் ரூபா 10/- செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவம் பெறவரும் போது சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். தபால்மூலம் பெற விரும்புவோர் நிதியாளரின் பெயருக்கு எழுதப்பட்ட 10/- ரூபாவிற்கான காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளையுடன் 8 - ரூபா பெறுமதியுள்ள முத்திரை ஒட்டி சுயவிலாசமிடப்பட்ட தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பபடிவங்கள் 01-06-1992 இற்கு முன்பாக கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். 01-06-1992 இற்குப் பின்பு வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.
10-04-1992

(எ-2094)


# யாழ். மாவட்டத்திற்கு சுகாதார தலைமை அலுவலக சுற்றுநிருபம் கிடைப்பதில்லை

[பண்டத்தரிப்பு]

கொழும்பிலுள்ள சுகாதார திணைக்கள தலைமை அலுவலகத்தினுலும், சுகாதார மகளிர் விவகார அமைச்சினுலும் வெளியிடப்படும் சுற்றுநிருபங்கள, சுற்றுநிருபக் கடிதங்கள் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சுகாதார திணைக்கள நிறுவனங்கள் மற்றும் அரசாங்க வைத்திய சாலைகள் ஆகியவற்றிக்கு சரிவரக் கிடைப்பதில்லை என்று புகார் தெரிவிக்கப்படுகின்றது.

மத்திய தரதொழில் நுட்பவியலாளர் தரம் மூன்றுக்கான மேலதிக நேர வேலைக்கான படி கொடுப்பனவு வழங்குவது பற்றி கடந்த 1991-ம ஆண்டு நவம்பர் மாதம் 20-ம் திகதி வெளியிடப்பட்ட 3540 இலக்க சுகாதார அமைச்சின் சுற்றுநிருபம் உட்பட பல முக்கிய சுற்றுநிருபக் கடிதங்கள் பல மாத காலமாகியும் இன்று வரை யாழ். பிராந்தியத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படவில்லையென்று கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இதைவிட சுகாதாரதிணைக்கள ஊழியர்களின் பதவி உயர்வு, தகுதிகாண் தடை பரீட்சை, தாதிகள் பயிற்சி நெறிக்கு சிற்றூழியர்களிடமிருந்து விண்ணப்பம் கோருதல் போன்றவை பற்றிய திணைக்கள சுற்றுநிருபங்களில் பல உரிய காலத்தில் இங்கு கிடைப்பதில்லை

சில வேளைகளில் இவை முற்றுக கிடைக்காத சந்தர்ப்பங்களும் உண்டு என்று சில தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (72)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## முதுதத்துவமானி தகுதிகாண் தேர்வு 1991/92

முதுதத்துவமானி தகுதிகாண் தேர்வுக்கான பின்வரும் பாடங்களில் பட்டப்படிப்பில் சாதாரண சித்தியடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருளியல்
புவியியல்
இந்து நாகரிகம்
தமிழ்
சமஸ்கிருதம்
கிறிஸ்தவ நாகரிகம்
வரலாறு
மெய்யியல்
மொழியியல்
நுண்கலை
நாடகமும் அரங்கியலும்
வர்த்தகம்

அறிவுறுத்தல்களுடன் கூடிய விண்ணப்பப் படிவங்கள் நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் 27-04-1992 இலிருந்து 25-05-1992ம் திகதிவரை பெற்றுக்கொள்ளலாம்.

நேரடியாக விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர் பல்கலைக் கழக நிதியாளரிடமிருந்து 10 ரூபா செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவம் பெற வரும்போது சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். தபால்மூலம் பெறவிரும்புவோர் நிதியாளரின் பெயருக்கு எழுதப்பட்ட 10/- ரூபாவிற்கான காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளையுடன் 8/- ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டிய சுயவிலாசமிடப்பட்ட தபால் உறையுடன் அனுபபுதல வேண்டும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 01-06-1992 திகதிக்கு முன்பாக கலைப் பீடாதிபதி அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். 01-06-1992 இற்குப் பின் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
10-04-1992.

(எ-2095)


### லீக் உதைபந்தாட்டம்

# இறுதி ஆட்டத்திற்கு அன்ரனிஸ் அணி தகுதி

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடைபெறும் உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டியில் பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகமும், வைக்கிங்ஸ் கழகமும் வெற்றி பெற்றன.

நேற்றுமுன்தினம் பாஷையூர் சென். அன்ரனிஸ் கழக மைதானத்தில் நடைபெற்ற 'ஏ' பிரிவு ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் கழகம் நாவாந்துறைசென். மேரிஸ் கழகத்தை இலகுவாக 5—2 கோல்களால் வெற்றிபெற்று இறுதிபாட்டத்திற்கு தகுதிபெற்றது. இப்போட்டிக்கு திரு. ஜி. எம். செபஸ்தியாம்பிள்ளை மத்தியஸ்தம் வகித்தார்.

வைக்கிங்ஸ் கழகத்துக்கும் சென் றேக்ஸ் கழகத்துக்கும் இடையில் நடைபெற்ற 'பி' பிரிவு ஆட்டத்தில் வைக்கிங்ஸ் கழகம் 2 — 0 கோல்களால் வெற்றிபெற்றது. இப்போட்டிக்கு திரு எம். கே. விமலதாசன் மத்தியஸ்தம் வகித்தார்.

#### நாளைய ஆட்டங்கள்

பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நாளை நடைபெறும் ஆட்டங்களில் உரும்பராய் சென். மைக்கல் கழகத்தை எதிர்த்து சென். றேக்ஸ்கழகம் மோதும். 'ஏ' பிரிவு ஆட்டத்தில் கிறீன் பீல்ட் கழகத்தை எதிர்த்து பாடும்மீன் கழகம் அரைஇறுதி ஆட்டத்தில் மோதும். (வி)

## இராசி பலன்

24/04/1992
வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு சித்திரை 12)

ஸப்தமி பி. ப. 2-49 வரை, உத்தராடம் பி இ. 1-13 வரை, சித்தயோகம் இராகு காலம் காலை 10-30 முதல 12-00 வரை, சுபநேரம் காலை 6-00 முதல் 7-30 வரை.

மேஷம்: கலைஞானம், அவசரசெயல், பிறர் அறிவுரை.

இடபம்: கொள்கைப் போராட்டம், தயக்கம், நோய்உபாதை.

மிதுனம்: பாவிகள் சம்பந்தம், பணமுடை, விவாதம்.

கடகம்: வீண்படாடோபம், மனைவியால் பெருமை, தனவரவு.

சிங்கம்: தொழில் திறமை, பொறுப்பை நிறைவேற்றல், மனநிறைவு.

கன்னி: உறவினர் தூற்றல், அதிக யோசனை, அலைச்சல்.

துலாம்: பழிவாங்கல், பெண்பகை, அகாலபோஜனம்.

விருச்சிகம்; சுயவிளம்பரம், காரியசித்தி, குடும்பநலம்.

தனுசு: கருத்து வேறுபாடு, மனக்குறை, சோம்பல்.

மகரம்: புதிய சிந்தனை, மகான் தரிசனம், தியாகம்.

கும்பம்; அவப்பெயர், குடும்பவிரோதம். கடன் சுமை,

மீனம்: கீழ்ப்படிதல், நல்ல செய்தி, மனமகிழ்ச்சி.

—ஜோஸ்யர்

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினுல் நடாத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டம்:

குருநகர் பாடும்மீன் மஞ்கள் அணியை எதிர்த்து பாஷையூர் சென். அன்ரனீஸ் அணி மோதும். இப்போட்டி யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறும். [சி]

## காய்கறி திருட்டு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பகுதியில் உள்ள வயல் காணிகளில் விவசாயிகளின் விளைபொருட்கள் இரவு வேளைகளில் திருடப்பட்டு வருகின்றது விவசாயிகளின் உற்பத்திப்பொருட்களான கத்தரிக்காய், மிளகாய். பீற்றூட் ஆகிய மரக்கறி வகைகள் ஆட்கள் இல்லாத நேரம் பார்த்து திருடப்படுவதால் விவசாயிகள் விரக்தியடைந்துள்ளனர். (72)

## செயலக அணி வெற்றி

[மானிப்பாய்]

யாழ். செயலக கிரிக்கெட் அணிக்கும், யாழ் வர்த்தக வங்கி கிரிக்கெட் அணிக்குமிடையே அண்மையில் 20 ஓவர் கொண்ட கிரிக்கெட் போட்டி இடம்பெற்றது.

அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் யாழ். செயலக அணி 6 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.


## ஜாம் போத்தல் மூடி Sealer
## Omnia Jam Bottle Sealer
## தேவை

பாவித்த அல்லது புதிய Omnia Sealer தேவை.]
விலை விபரங்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

**TasteLine Industries(Pvt)Ltd**

No. 14, Seenier Lane, Jaffna. (ஏ-2097)

★ மெக்ஸிக்கோவில் அனர்த்தம்:

# கழிவுநீர்க் குழாய்கள் வெடித்ததில் 150 பேர் பலி; பலர் படுகாயம்

## பல கட்டிடங்கள் இடிந்து வீழ்ந்தன

(மெச்சிக்கோ நகர்)

மெச்சிக்கோவில் இரண்டாவது தலைநகராகக் கருதப்படும் குவாடலாயாராவில் கழிவுநீர் குழாய்களில் ஏற்பட்ட வரிசையான பலவெடிப்புக்களில் சுமார் 150 பேர் இறந்து போயுள்ளனர். நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

நிலத்தின் கீழ் அமைந்துள்ள கழிவுநீர் வடிகால் அமைப்பு முறையில்ஒரேயடியாக நவிந்து ''வாயு'' சேர்ந்து விட்டதன் விளைவாக இந்த பெருத்த வெடிப்புகள் நேரிட்டதாக நம்பப்படுகிறது.

இந்த வெடிப்புக்களினல் பல கட்டிடங்கள் இடிந்தும் சரிந்தும் போயுள்ளன. இந்த இடிபாடுகளுக்குள்ளும் மேலும் பலர் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

அப்பகுதியில் குடியிருந்த பலர் 'வாயு' வெடிப்பு ஏற்பட முன் அப்பகுதியில் ஏற்பட்ட நாற்றத்தைப் பற்றி புகார் செய்திருந்த பின்னர் இந்த வரிசையான வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன.

பூமி அதிர்ச்சி ஏற்பட்டது போல் இந்த வெடிப்புகள் நிகழ்ந்துள்ளன, 15 இடங்களில் இவ் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நெருக்கமாக மக்கள்வாழும் இப் பகுதியில் இவ்வெடிப்புகளினல் பல கார்கள் வீட்டுக் கூரைகளிலும் மரங்களிலும் தொங்கியபடி காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

பல காரியாலய கட்டிடங்கள், கடைகள், வீடுகள் இடிந்து வீழ்ந்ததோடு மரங்களெல்லாம் சரிந்து பாதைகளையும் தடைப்படுத்தியுள்ளன.

ராணுவத்தினரும் தீயணைப்புப் படையினரும் மீட்புப்பணியில் ஈடுபட்டுள்ளனர். காயமுற்றோர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தற்போது அப்பகுதி மக்கள அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். (கே)

## மூடப்படும்

(கொழும்பு)

சபுகஸ்கந்த எண்ணெ சுத்திகரிப்பு தொழிற்சாலை மூன்று மாதங்களுக்கு மூடப்படும். மசடி எண்ணெயை அகற்றிச் சுத்தமாக்க, யூன் முதல் வாரத்திலிருந்து மூடப்படவுள்ளன, [கே]

## பாதிக்கப்பட்ட சிறுவருக்கு உதவ ஏற்பாடு

[கொழும்புத்துறை]

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் இராணுவ வன்செயலின்போது தந்தையை இழந்த வறிய சிறுவர்களுக்குப் புதிதாக உதவிப் பணம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசம் மேற்கொண்டுள்ளது. [159]

## தீர்ப்பை மாற்றுமாறு தமிழக அரசுக்கு கோரிக்கை

(சென்னை)

ஆங்கில வார ஏடு ஒன்றின் முன்னள் நிருபர் கே. பி. சுனிலே, கைதுசெய்ய உத்தரவிடுவது என்ற முடிவை தமிழ் நாடு சட்டசபை தலைவர் சேடப்பட்டி முத்தையா மாற்றிக் கொள்ள வேண்டும் என தென்னிந்திய பத்திரிகையாளர் சம்மேளனம் கேட்டுக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கத்தினரும், பத்திரிகைகள் மீது மாநில அரசு கடைப்பிடிக்கும் போக்கிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நேற்றுமுன் தினம்சென்னையில் ஒருநாள் அடையாள உண்ணவிரதம் இருந்தனர். (கே)

தேர்தல் அறிக்கை:

## தெரிவுக் குழு அமைக்கப்படும்

[கொழும்பு)

தேர்தல் ஆணையாளர் வெளியிட்டுள்ள பொதுத்தேர்தல் அறிக்கை குறித்து ஆராய நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்படவுள்ளது.

பொதுத்தேர்தலில் பல முறைகேடுகள் நடந்ததாக எதிர்க்கட்சிகள் குரல் எழுப்பியுள்ளன.

இதனையடுத்து ஆணையாளர் அறிக்கையை ஆராய குழு அமைக்கப்படுமென அரசு அறிவித்துள்ளது. [கே]

## இந்திய செயற்கைக்கோள் விண்வெளி செல்லவுள்ளது

(புதுடில்லி)

இந்தியாவிலேயே வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட 'இன்சாட் 2 ஏ' செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்படுவதற்காக தென் அமெரிக்காவிலுள்ள பிரெஞ்சு கயானு விண்வெளி ஏவுதளத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கட்டமைப்பில் இந்த செயற்கைக் கோளும் அதனேடு ஒட்டிய சோதனைச் சாதனங்களும் சேர்ந்தே அனுப்பப்பட்டன. யூன் மாத இறுதியில் இந்தச் செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்படும்.

தொலைத்தகவல்,ஒலிபரப்பு, வானிலை அறிவிப்பு போன்ற ஆற்றல்களை இச் செயற்கைக் கோளிலிருந்து பெறமுடியும் என தெரிவிக்கப்படுகிறது.

## புதைக்கப்பட்ட 3 சடலங்களை தோண்டி எடுத்து விசாரணை

(காலி)

கொலை வழக்கொன்றை விசாரிப்பதில் அக்கறையீனமாக இருந்த பொலிசார் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, மூன்று வருடங்களுக்கு முன் புதைத்து வைக்கப்பட்டிருந்த மூவரின் சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்ட சம்பவம் ஹக்மனைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது; அண்ணன் தங்கையின் சடலங்கள் ஒரே பெட்டியில் புதைத்து வைக்கப்பட்டிருந்தன. மாமனுரின் சடலம் தனிப்பெட்டியில் புதைக்கப்பட்டிருந்தது. இந்தமூன்று பிரேதங்களும் உருக்குலைந்து எலும்புக்கூடுகளாகக் காட்சியளிக்கின்றன.

நீதவான் திருமதி மாலினி குணரத்ன தோண்டி எடுக்கப்பட்ட சடலங்களின் பாகங்களையும் காலி மருத்துவபீடப் பேராசிரியர் சந்திரசிறி நெரியெல்லவனின் பரிசோதனைக்கு அனுப்பும்படி உத்தரவிட்டுள்ளார்.

இந்தக்கொலையில் சந்தேக நபர் ஒருவர் பொலிசாரினல் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார். (சு)

## விழிப்புலனற்றோர் 'வாழ்வகம்' செயலிழந்துள்ளது

(உடுவில்)

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளினல் தெல்லிப்பழையில் இயங்கி வந்த விழிப்புலனற்றோர் ''வாழ்வகம்'' செயலிழந்துள்ளது.

அங்கு வைத்து பராமரிக்கப்பட்ட பலர் வாழ்வகத்தை விட்டு வெளியேறி இடம் பெயர்ந்து வாழ்கின்றனர்.

வாழ்வகத்தை சிறப்பாக நடாத்துவதற்கு வேண்டிய சகல வசதிகள் இருந்தும் இட வசதி இன்மையால் ஒன்றுக வைத்து பராமரிக்க முடியாதிருப்பதாக வாழ்வக இயக்குனர் கவலை தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழையில் இயங்கி வந்த வாழ்வகம் விழிப்புலனற்றோர் விடுதியில் கிளிநொச்சி, மாங்குளம். வடமராட்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களை சேர்ந்த பலர் தங்கி இருந்து பராமரிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (109]

## ஊரியான் பாதையில் இடுப்புவரை சேறு

(ஆனையிறவு)

ஊரியான் பாதையூடாக பிரயாணம் செய்யும் பயணிகள், இடுப்புவரை சேறும் சகதியும் தேங்கிய வழியே செல்கின்றனர்.

தற்போது அப்பகுதியில் நீர் வற்றியுள்ளதால் வள்ளம் செலுத்துவது கடினம். பொது மக்கள் பல தூரம் இந்தச் சேற்றுச் சகதியூடாக நடந்தே தம் பயணத்தை மேற்கொள்கின்றனர். (கே)

## அமைச்சர் உத்தரவு

[கொழும்பு]

மக்கள்மயமாக்கப்பட்ட பஸ்களிலும் காரியாலயங்களிலும் தமிழ்மொழி இடம்பெற தான் உத்தரவிட்டுள்ளதாக அமைச்சர் பெஸ்ரஸ் பெரேரா கூறியுள்ளார். [கே]

வடக்கில்

## சிறந்த வங்கிக்கிளை

[யாழ்ப்பாணம்]

வடமாகாணத்தில் யாழ். வவுனியா, கிளிநொச்சி, மன்னர் மாவட்டங்களில் உள்ள இலங்கை வங்கிக் கிளைகளில் 1990ம் ஆண்டுக்கான சிறந்த கிளைகளாக நெல்லியடிக் கிளை, தலைமையகத்தினல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது சிறந்த கிளையாக மானிப்பாய் கிளை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. 1989ம் ஆண்டில், வடமாகாணத்தின் சிறந்த கிளையாக மானிப்பாய் கிளை தேர்ந்தெடுக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இக்கிளைகளில் பணிபுரிந்த வங்கி முகாமையாளர் மற்றும் ஊழியர்கள் சிறந்த விருதுகள் அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

## இலங்கை மீனவரை இந்தியா விடுவித்தது

(கொழும்பு]

இந்திய கடற்பிராந்தியத்தில் பிரவேசித்தமைக்காக இந்திய அரசினல் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட இலங்கை மீனவர்களில் 13 மீனவர்கள் நேற்று முன்தினம் இரவு நாடு திரும்பியுள்ளனர்.

மேலும் 16 இலங்கை மீனவர்கள் இந்திய அரசின் காவலில் உள்ளதாகவும் இவர்களை இலங்கை கொண்டுவருமுகமாக இலங்கை இந்திய அதிகாரிகள் மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 23, 27-ம் திகதிகளில் மேற்படி மீனவர்கள் படகுகளில் மீன்பிடிப்பதற்காக சென்றகாசவும் இந்திய கடற்பிராந்தியத்தில் வைத்து இந்திய கடற்படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகின்றது. (க)

மே 4-ம் திகதி

## தொழில்நுட்ப கல்லூரி பரீட்சைகள் ஆரம்பம்

(உடுவில்)

தொழில்நுட்பக் கல்லூரியின் 1989, 1990, 1991 ஆண்டுகளுக்கான இறுதிப் பரீட்சைகள் மே மாதம் நாலாம் திகதியிலிருந்து நடைபெற உள்ளன.

உயர்தேசிய கணக்கியல், வர்த்தகவியல் டிப்ளோமா 3ம் ஆண்டு, தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் உயர் தேசிய கணக்கியல் வர்த்தகவியல் 4ம் ஆண்டு, படம் வரைதல் தொழில் பயில்வோர் சான்றிதழ், உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா 2ம் வருடம் புதிய பாடத்திட்டம், உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா 3ம் வருடம் புதிய பாடத்திட்டம் ஆகியவற்றுக்கான பரீட்சைகள் நடைபெற உள்ளன.

பரீட்சைகள் ஆரம்பமாகும் திகதிக்கு முன்பு அலுவலக நாட்களில் உரிய பகுதித் தலைவர்களிடம் மாணவர்கள் தமது பிரவேச அனுமதிச் சீட்டை காண்பித்து. பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளுமாறு யாழ்ப்பாணம் தொழில்நுட்பக்கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். [109]

## காத்தான்குடிப் பகுதியில் மீன்பிடிக்கத் தடை

(மட்டுநகர்)

காத்தான்குடியில் ஆறுகளிலும் வாவிகளிலும் மீன்பிடிக்கக் கூடாதென பொதுமக்களை பொலிசார் உத்தரவிட்டுள்ளனர்.

மறு அறிவித்தல் வரை இந்த உத்தரவு அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இத் திடீர் உத்தரவிற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படாதபோதும் பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டே இந்நடவடிக்கை என கூறப்படுகிறது. (கே)

## நினைவஞ்சலிக் கூட்டம்

[பண்டத்தரிப்பு]

சண்டிலிப்பாய் நந்தன் விளையாட்டு மைதானத்தில் மாவீரன் லெப். நந்தனின் 4வது நினைவஞ்சலிக் கூட்டம் சண்டிலிப்பாய் வட்டவை செயலக பொறுப்பாளர் திரு. நாவேந்தன் தலைமையில் நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் வலிகாமம் அரசியல் பிரிவு பொறுப்பாளர் திரு.வேங்கையன் மங்கல விளக்கேற்றி கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

சண்டிலிப்பாய் வட்டவை பிரிவு மகளிர் முன்னணி பொறுப்பாளர் செல்வி மொழி, திரு. நெடுங்கீரன் உட்பட பலர் உரையாற்றினர்கள். [72]

★ கொம்படியில்

# அவலக்குரல்களின் மத்தியில் சிதறிய உடல்களைக் கண்டேன்

## - உயிர்தப்பிய பெண் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

கொம்படிப் பாதையில் நேற்று நடைபெற்ற மர்மக் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஆனந்தவடிவேலுவின் மனைவி இக்குண்டுவெடிப்பு பற்றி பின்வருமாறு கூறினார்.

நேற்று நண்பகல் என் கணவரின் சகோதரரின் மூன்று பிள்ளைகளுடன் நானும் என் கணவரும், என் மகனும் சேர்ந்து எமது சொந்த இடமான பண்டிவிரிச்சானுக்கு செல்வதற்காக மேற்படி குண்டு வெடித்த கடைக்கு முன்னால் நின்றபோது என் மகன் வடை வாங்கித் தரும்படி கேட்டார்.

இதற்காகச் சிறிது தொலைவிலுள்ள மற்றொரு கடைக்கு மகனுடன் சென்றேன் அப்போது என் கணவரும், அவரின் சகோதரரின் மூன்று பிள்ளைகளும் அதேயிடத்தில் நின்றார்கள். அப்போது என் கணவர் சிறுநீர் கழிப்பதற்காக அருகிலிருந்த மரத்தடிக்குச் சென்றபோதே இக்குண்டு வெடிப்பு நிகழ்ந்தது.

வெடிச்சத்தம் கேட்டு நானும், என் மகனும் பிள்ளைகள் நின்ற இடத்துக்கு ஓடி வந்தோம். அந்த இடம் ஒரே புகைமண்டலமாக இருந்தது. சில நிமிடங்களின் பின்பு என் கணவரின் சகோதரரின் மூன்று பிள்ளைகளும் உடல் சிதறி இறந்து கிடக்கக் கண்டேன். அதிலிருந்து சற்று தூரத்தில் என் கணவர் படுகாயமடைந்த நிலையில் நினைவிழந்து கிடந்தார்,

அதேபோல் அப்பகுதியில் பல உடல்கள் சிதறிய நிலையிலும் பலர் படுகாயமடைந்த நிலையிலும் நினைவிழந்து கிடந்தனர். எங்கு பார்த்தாலும் ஒரே அவலக் குரல்கள் கேட்டவண்ணமிருந்தன என்று அழுத வண்ணம் கூறினார். [வி]

# 'மே'தின ஊர்வலம் பாரிய அளவில் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தொழிலாளர் தினமாகிய மே நாளை ஒடுக்கப்படும் மக்களது தேசிய எழுச்சிநாளாக விடுதலை உணர்வுமேலோங்கும் எழுச்சியாக முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆங்காங்கே சுவரொட்டிகளும், பதாகைகளும் மக்களை எழுச்சிக்கு அழைக்கின்றன. இம்முறை முன்னெப்போதுமில்லாத வகையில் மதம்சார் அமைப்புகளும் மேநாள் ஊர்வலத்தில் கலந்துகொள்கின்றன. ஊர்வலப்பாதையின் பல இடங்களில் பந்தல்கள் அமைக்கப்படுகின்றன.

மேலும் சனசமூகநிலையங்கள், கிராமிய அபிவிருத்தி நிறுவனங்கள், மகளிர் அமைப்புகள், தேசிய உணர்வுகளை ஊர்திகளில் வடிவமைக்கின்றன. ஊர்வலத்தில் கலந்து கொள்ளும் பெருந்திரளான மக்களது அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகளும் அமைக்கப்படுகிறது.

### கொழும்பு பயணம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாலும் யாழ்நகருக்கு திரும்பி விட்டதாகவும் கொம்படிப் பாதையில் படகுச்சேவைகள் யாவும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக பயணிகள் தெரிவித்தார்கள். [வி]

### யாழ்.ஆஸ்பத்திரி

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வர். இன்று அல்லது நாளை போதனா வைத்தியசாலையை சுற்றிப் பார்வையிடுவதுடன் வைத்தியப் பணிப்பாளர், செயலாளர் மற்றும் வைத்திய உயரதிகாரிகளையும் சந்திக்க உள்ளனர். [56]

### தமிழருக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போராட்ட வடிவம் தோற்றம் கொண்டது. தமிழினத்தின் போராட்டம் தர்மத்தையும சத்தியத்தையும் அடிப்படையாகக்கொண்டதுஎன்றார். [ரி]

### சிங்கள கைதிகளை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளனர்.

கடந்த டிசம்பர் மாதம் அவர்களது உறவினர்கள் வந்து யாழ்ப்பாணத்தில் சந்திப்பதற்கு தலைவர் பிரபாகரன் அனுமதிவழங்கியும் இராணுவ கூட்டுத்தலைமையகம் கடைசி நேரத்தில் அனுமதி வழங்க மறுத்தது தெரிந்ததே. (56)

★ இலங்கையருக்கு

# சவுதி அரேபியாவில் இனிமேல் சம்பளம் 2,000 மட்டுமே

[றியாட்]

சவூதி அரேபியாவில் தொழில் புரியும் இலங்கையருக்கு இனிமேல் இரண்டாயிரம் ரூபா மட்டுமே மாதச் சம்பளமாக வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி அறிக்கையில் நீண்டகாலமாக சவூதி அரேபியாவில் தொழில் புரிந்து வரும் இலங்கையருக்கு இதுவரை கணிசமான அளவு சம்பளம் வழங்கப்பட்டு வந்ததாம். தற்போது இந்தியா, பாகிஸ்தான் போன்ற ஏனைய நாடுகளிலிருந்து பலர் மிகக் குறைந்த சம்பளத்தில் வேலை செய்வதற்கு விருப்பம்தெரிவித்துள்ளதனால் இலங்கையருக்கு இன்னும் சில மாதங்களில் இரண்டாயிரம் ரூபா மாத்திரமே சம்பளமாக வழங்கப்படுமென அறிவிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

இதனால் வடபகுதியிலிருந்து சென்று அங்கு தொழில் புரியும் பலர் மிக விரைவில் திரும்பிவரவுள்ளதாக தமது உறவினர்களுக்கு எழுதியுள்ள கடிதமூலம் தெரியவந்துள்ளது. [71]

# செஞ்சிலுவைக் குழு இன்று பலாலி செல்லும்

[யாழ்ப்பாணம்]

படையினரால் கைதுசெய்யப்பட்டு பலாலியில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 154 தமிழர்களை சந்தித்து உரையாட இன்று காலை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள் இருவர் பலாலி செல்கின்றனர்.

பலாலிமுகாம்சென்று கைதிகளுடன் உரையாடுவதற்காக தமிழ்த் தெரிந்த பிரதிநிதியும் செல்கிறார்.

தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களுக்கு உறவினர்களால் அனுப்பப்படும் பொருட்களையும், கடிதங்களையும் கொடுப்பதற்குகூட எடுத்துச் செல்கின்றார்கள். [56]

# ஊர்காவற்றுறையில் புலிகள் நடமாட்டம்

[கொழும்பு]

ஊர்காவற்றுறையில் விடுதலைப்புலிகளின் நடமாட்டம் நேற்றுமுன்தினம் அவதானிக்கப்பட்டதாக கூட்டுப்படை தலைமையகத்தை சேர்ந்த கேர்ணல் சரத்முனசிங்க தெரிவித்தார்.

மேலும் புலிகளுக்கும் படையினருக்குமிடையில் இங்கு மோதல்கள் இடம்பெற்றதாகவும் தெரிவித்தார். [மா]

# புலிகள் விவகாரத்தில் ரணில் மறுப்பு

[கொழும்பு]

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் இந்திய 'நீதிமன்றமொன்றினால் விசாரிக்கப்படுவதற்கு இதில் சம்பந்தப்பட்டதாக கூறப்படும் விடுதலைப் புலிகளை இந்தியாவிற்கு அனுப்பிவைக்க இயலாது என்று இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா ஒருபோதும் கூறவில்லை என்று ரணில் விக்கிரமசிங்க மறுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் கூட்டத்தில அமைச்சர ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது;

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி பிரேமதாசா பேருவளையில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் இலங்கையில் பெரும்பான்மை சமூகத்தவர்களிடையே நிலவ வேண்டிய உறவு பற்றியே குறிப்பிட்டதாகவும் தெரிவித்தார். (மா)

## கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணக் கோட்டக் கல்விப் பிரிவு அதிபர்கள், மற்றும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று (வெள்ளி) மாலை 3-00மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைவரும் தவறாது சமூகம் தரும்படி யாழ். கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## சத்தியஜித்ரே காலமானார்

(புதுடில்லி)

பல சர்வதேச விருதுகளைப் பெற்ற பிரபல இந்தியத் திரைப்பட இயக்குநர் சத்தியஜித்ரே (70-வயது) நேற்று கல்கத்தாவில் காலமானார். (மா)

### நாடாளுமன்றில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி ஆட்சி மற்றும் சில விவகாரங்கள் பற்றி ஆளும்கட்சி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உரையாற்றியபோது கூச்சல் குழப்பங்கள் ஏற்பட்டது.

இதனால் சபை சிலமணி நேரம் ஒத்திவைக்கப்பட்டது. (சி)

### கோட்டை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்ட பகுதிகளைச் சுற்றிப் பார்வையிட்டனர்.

நேற்றுக்காலை 8 மணியளவில் யாழ்ப்பாணத்தில் கோட்டை, மாநகரசபை அலுவலகம், நீதிமன்று, நூல் நிலையம், வீரசிங்கம் மண்டபம், எரிந்த தபால் நிலையம், தொலைத் தொடர்பு நிலையம் பகுதியையும் கோட்டையில் நின்று மண்டைதீவுப் பகுதியையும் பார்வையிட்டனர்.

வடமராட்சியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் மாவீரர் துயிலும் இல்லம், திருவில் நினைவுத்தூபி ஆகியவற்றையும் பார்வையிட்டனர். (வி-56)

### பிக்குகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பிக்கப்படவுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் பௌத்தபிக்குகளுக்குமிடையில் நேற்றுக் காலை சுமார் ஒன்றரை மணிநேரம் முதல் கட்டப்பேச்சுக்கள் நடைபெற்றன.

இதன்போது இனப்பிரச்சனை தீர்வு குறித்து மேற்படி பௌத்த பிக்குகள்குழுயோசனை ஒன்றை புலிகளிடம் சமர்ப்பித்தது. இதனை ஆராய்ந்து இந்தயோசனை குறித்து பதிலை நாளை நடைபெறவுள்ள 2ம் கட்ட பேச்சுக்களின் போது சமர்ப்பிப்பதாக புலிகள் பௌத்தகுழுவினரிடம் தெரிவித்தனர்.

இப் பேச்சுவார்த்தையில் புலிகள் தரப்பில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், மூத்த உறுப்பினர் இளங்குமரன், கோ. மகேந்திரராசா, யோகி, வே. பாலகுமார், இ. பரதன், யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி, யாழ். மாவட்டத் தளபதி செல்வராசா, மகளிர் முன்னணிச் செயலாளர் திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோர் இச் சந்திப்பில் புலிகளின் சார்பில் கலந்துகொண்டனர்.

### மன்னார்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சமுலான ஊரடங்குச்சட்டம் இன்று காலை 6 மணியுடன் நீக்கப்படுவதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (மா)

### இனப்பிரச்சனைக்கான

(1ம் பக்கத் தொடர்ச்சி

எதிராக மேற்கொள்ளப்பட்ட பாரபட்சமான நடவடிக்கைகளுமே இன்றைய இனப்பிரச்சனைக்கான காரணமென பௌத்த தூதுக்குழுவின் தலைவர் சித்தாத்தர மகாநாயக்க தேரோ தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர்மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது: காலம் காலமாக சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒற்றுமையாக சகோதரர்களாக வாழ்ந்து வந்தனர். மீண்டும் ஐக்கியமும், சகோதர உணர்வும் தழைத்தோங்க வேண்டும் என்றார்.

### கொம்படியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செ. வேல்முருகன் [40-வயது, எள்ளுக்காடு, உருத்திரபுரம்], யேசுதாஸ் கிங்ஸ்லி [15-வயது, தாளையடி], கந்தசாமி ஆனந்தவடிவேல் [37-வயது, பெரியபண்டிவிரிச்சான், மன்னார்], தவராசா கோபாலகிருஷ்ணன் [09 – வயது, பெரியபண்டிவிரிச்சான், மன்னார்], இராசையா தர்மகுலசிங்கம் [35 – வயது, தட்டுவான்கொட்டி], அந்தோனி அருமைத்துரை [36-வயது, இளவாலை], அந்தோனிமுத்து துரைசிங்கம் [54-வயது, தாளையடி]. சூசைநாதர் யேசுதாசன்[21-வயது, இளவாலை].

இவர்களைத் தவிர மேலும் பலர் காயமடைந்த நிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

நேற்றிரவுவரை யாழ் ஆஸ்பத்திரியில் காயமடைந்தவர்கள் அனுமதிக்கப்பட்டவண்ணம் இருந்தனர்.

இப்பகுதியில் 10 க்கு மேற்பட்ட கடைகள், வாகனங்களும் இக்குண்டு வெடிப்பில் பலத்த சேதத்திற்குள்ளாகின.

இக்குண்டு வெடிப்பைத் தொடர்ந்து கொம்படிப்பகுதி எங்கும் பெரும்பதற்றம் நிலவியது. [56-வி]

## மரண அறிவித்தல்

### செல்லையா பேரம்பலம்

மண்கும்பானை பிறப்பிடமாக கொண்டவரும் நல்லூர் வைமன் வீதியை வசிப்பிடமாக கொண்டவருமான செல்லையா பேரம்பலம் என்பவரது ஈமைக்கிரியை நேற்று தவிர்க்க முடியாததன் காரணமாக நடைபெறவில்லை. அன்னாரின் ஈமக்கிரியை இன்று பி. ப 3-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(சி-6203) தகவல்: பிள்ளைகள்

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81